சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | குமார் |
| தந்தை பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 48 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன்

ஆவேன். ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 2 பெண் குழந்தைகள் இருந்தனர். முதல் பெண் நந்தினி அவர் B.Sc நர்சிங் படித்துள்ளார். சென்னையில் வேலை செய்து வருகிறார். எனது 2 வது மகன் பெயர் நந்துதாஷினி ஆவார். அவர் லேப் டெக்னிசியன் படித்துள்ளார். எனது 2 வது மகளான நந்துதாஷினி கடந்த 19.03.2025 ஆம் தேதி அன்று திருத்துறைப்பூண்டியில் உள்ள எனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டார். இவர் தற்கொலை செய்து கொண்ட விவரம் திருவாரூரில் உள்ள மாவூர் என்ற இடத்தில் நான் வேலைக்கு வந்திருந்தேன். அப்போது பகல் 12.30 மணியளவில் எனது பெரிய மகள் நந்தினி எனக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு "சூரியா என்பவர் தன்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு உமது தங்கை நந்துதாஷினி தூக்கு போட்டுக் கொள்ளப்போவதாக முடிந்தால் அவரை காப்பாற்றுங்கள்" என்று தகவல் சொன்னதாகவும் என்னிடம் சொன்னார் என என்னிடம் தெரிவித்தார். மேலும் சூரியா என்பவரும் நந்துதாஷினியும் காதலித்து வந்ததாகவும், பின்னர் ஜாதி பெயரை குறிப்பிட்டு திருமணம் செய்ய மறுத்துவிட்டதாகவும், அதனால் தான் நந்துதாஷினி தூக்குமாட்டிக் கொண்டதாகவும் சொன்னார். தற்போது சாட்சி எனது மூத்த மகளிடம், சூரியா என்பவர் நந்துதாஷினி தூக்கு போட்டுக்கொண்டது என்றும், போய் அள்ளிக்கொள்ளுங்கள் என்றும், சொன்னதாக கூறுகிறார். நான் உடனடியாக ஊருக்கு சென்றேன். அப்போது நான் ஊருக்கு செல்லும் வழியிலேயே என் மகள் இறந்து விட்டதாகவும் அவரது பிரேதத்தை முதலில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டதாக சொன்னார்கள். நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனது மகள் நந்துதாஷினியின் பிரேதத்தை பார்த்தேன். நான் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றேன். அங்கு இந்து போலீசாரிடம் நடந்த விவரத்தை சொன்னேன். போலீசார் விவரத்தை எழுதிக்கொண்டு என்னிடம்

கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் அளித்தப்பின்னர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். எனது மகள் நந்துதாஷினி பிரேதத்தினை திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் இருந்து திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்தனர். பின்னர் அங்கு வைத்து பிரேத பரிசோதனை செய்த பின்னர் எனது மகள் நந்துதாஷினி பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். நாங்கள் ஊருக்கு சென்று நல்லடக்கம் செய்தோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை 2 முறை விசாரணை செய்தார். காவல் துணை கண்காணிப்பாளர் 1 முறை என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.11.10 17:08:22 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.